முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1040

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.08.2022, வியாழக்கிழமை

1. ஞான சக்தியே அரங்கா வாழ்க
   ஞானிகள் பலம் கொண்ட தேசிகா வாழ்க
   வானவர்கள் மெச்சும் தர்மத்தை
   வாரி வழங்குகின்ற வள்ளலே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   ஊழ்போக்கும் மகா சக்தி கொண்ட குருவே
   உலகோரை காக்க வந்த ஞான குருவே
3. குருவே அரங்கனே உந்தனுக்கு
   குவலயத்தில் அன்பர் படை பெருகி
   ஞான உலகமாற்றம் சடுதி
   ஞானியர் உன்வழி நடந்தேறக்கூடும்
4. கூடவே இந்த மாற்றம் நிகழ
   குருபரன் யான் உன்னோடு இணைந்து
   தடையற அகஜோதிக்குள்ளே
   தகதகவென ஆறுமுகன் யானும்
5. யானும் ஆக்கம் ஊக்கம் ஆற்றல்பட தந்து
   உந்தனுள்ளே அற்புதத்தை நடத்தி வருகின்றேன்
   மாற்றம் சடுதி உன் சக்திகொண்டே மக்களுக்கு தந்து ஞானவான்களாக்கி
   ஆற்றல்பட இந்த உலகத்தை ஆக்குவேன் ஞானஉலக மாற்றமாக
6. மாற்றம் தரும் மாதவசி உந்தன்
   மகத்துவம் உலகோர் அறிய அடைய
   ஜெகமெல்லாம் ஞானிகள் படை பெருகி
   செப்பிடுவேன் ஞான ஆட்சிக்காலம் உருவாகும்
7. ஆகவே அரங்கன் உபதேசம்
   ஆறுமுகன் யானருளும் உபதேசமாகும்
   ஜெகத்தோர் உணர்ந்தால் போதும்
   சித்திகள் தானாக சடுதி காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–